**தலைப்பு 274 - அனுராதபுரம் மாவட்டச் செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2014 ஆம் ஆண்டு**

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை மாவட்டச் செயலகத்தின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 3 ஆம் பந்தியில் தலைப்பிற்குரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்படுகின்றது.

**1. மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்**

----------------------------------------------------------------------------------------------------

(அ) பதவிய
(ஆ) கெபிதிகொல்லேவ
(இ) மதவாச்சி
(ஈ) ரம்பேவ
(உ) ஹொரவப்பொதான
(ஊ) கலென்பிந்துனுவெவ
(எ) கஹடகஸ்திகிலிய
(ஏ) கிழக்கு நுவரகம் பலாத
(ஐ) நாச்சியதீவு
(ஒ) மத்திய நுகரகம் பலாத
(ஓ) நொச்சியாகம
(ஔ) மஹவிலச்சிய
(க) தலாவ
(கா) தம்புத்தேகம
(கி) ராஜாங்கனை
(கீ) கல்னேவ
(கு) இபலோகம
(கூ) திரப்பனை
(கெ) மிஹிந்தலை
(கே) பலுகஸ்வெவ
(கை) கெக்கிராவ
(கொ) பலாகல

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

--------------------------------------------------

அநுராதபுரம் மாவட்ட செயலகத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள் இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள், ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 ஆகஸ்ட் 27 ஆந் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்ப்படுத்தல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. கணக்குகள்

--------------------

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

------------------------------------

(அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவும்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்காக மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய ஏற்பாடு ரூபா 1,021,368,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் இதில் ரூபா 1,016,727,744 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் தேறிய நிதிஏற்பாட்டில் ரூபா 4,640,256 அல்லது 0.45 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்:டுள்ளன.

| **செலவினம்** | **2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு** | | | **தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள்** |
|---|---|---|---|---|
| | **தேறிய நிதியேற்பாடு** | **பயன்பாடு** | **சேமிப்புக்கள்** | |
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | |
| மீண்டெழுபவை | 606,191,592 | 605,252,378 | 939,214 | 0.15 |
| மூலதனம் | 415,176,408 | 411,475,366 | 3,701,042 | 0.89 |
| மொத்தம் | 1,021,368,000 | 1,016,727,744 | 4,640,256 | 0.45 |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்**

--------------------------------------------------------------------------------------------------------------------------------

பல்வேறு செயற்பாடுகளுக்காக 26 அமைச்சுக்களினாலும் 19 திணைக்களங்களினாலும் மாவட்ட செயலகத்திற்கு முறையே ரூபா 3,886,278,903 மற்றும் ரூபா 2,096,102,529 உமாக ரூபா 5,982,381,432 கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன், அதில் முறையே ரூபா 3,223,615,979 மற்றும் ரூபா 1,866,571,900 உமாக ரூபா 5,090,187,879 கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்த

நிதிஏற்பாடுகளில் முறையே ரூபா 662,662,924 தொகையும் ரூபா 229,530,629 உமாக ரூபா 892,193,553 கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தன.

## 2.2 முற்பணக் கணக்குகள்

---

### அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

---

மாவட்ட செயலகத்திற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளவாறான பெறுமதிகள் என்பன கீழே தரப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதிகள் | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக்குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 27401 | 49,000,000 | 48,850,519 | 35,000,000 | 38,177,458 | 200,000,000 | 167,640,932 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

---

மாவட்ட செயலகத்தின் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 5,038,774 ஆக இருந்தது.

## 2.4 பொது வைப்புக் கணக்குகள்

---

2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மாவட்ட செயலகம் மற்றும் 22 பிரதேச செயலகங்களின் பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 516,400,540 ஆக இருந்தது.

## 2.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

---

2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் அநுராதபுரம் மாவட்ட செயலகத்தினது ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில்

குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாக தயாரிக்கப்பட்டிருந்தன. அம்முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. தலைப்பு 274 - அனுராதபுரம் மாவட்டச் செயலகம்

---

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினாலும் பிரதேச செயலகங்களினாலும் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் கீழே காட்டப்பட்டுள்ள பிரதேச செயலகங்களினால் முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

| பிரதேச செயலகம் | பேணப்படாதிருந்த பதிவேடுகள் | உரிய பிரமாணம் |
|---|---|---|
| மத்திய நுவரகம்பலாத | கணனி மற்றும் கணனி உதிரிப் பாகங்கள் மென்பாகங்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| மதவாச்சி | பொறுப்புக்கள் பதிவேடு | நிதிப் பிரமாணம் 214 |

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

### 3.2.1 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்வேறு செயற்பாடுகளுக்காக அமைச்சிலிருந்தும் வேறு 26 அமைச்சுக்கள் மற்றும் இரண்டு திணைக்களங்களிலிருந்தும் மாவட்டச் செயலகத்திற்கு ரூபா 143,169,621 கூட்டுத்தொகையான நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மாவட்ட செயலத்தினால் அந்நிதிற்பாடு ரூபா 2,844,383 ஆல் விஞ்சி ரூபா 146,014,004 தொகையான நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) அமைச்சினால் அனுப்பப்பட்டிருந்த ரூபா 29,000 நிதிஏற்பாடு மாவட்ட செயலகத்தினால் குறித்த செயற்பாட்டிற்கு பயன்படுத்தாமல் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது.

(இ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த மூலதனச் செலவினத்திற்கான நிதிஏற்பாடுகளிலிருந்து மாவட்ட செயலகத்தினால் ரூபா 6,556,740 ஆன மீண்டெழும் தன்மையிலான செலவினங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது.

### 3.3 கட்டுநிதிக் கணக்கு

2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மாவட்ட செயலகத்தின் கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 626,108 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 210,872 தொகையான மீதி 2010 ஆம் ஆண்டிலிருந்து நிலவி வந்தது.

### 3.4 பொது வைப்புக் கணக்கு

04 பிரதேச செயலகங்களுக்குரிய 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் இரண்டு வருடங்களைக் கடந்த ரூபா 1,104,797 ஆன வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

27401 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குத் தொடர்பான 2014 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றின்

பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த தனிப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,675,865 ஆக இருந்ததுடன், அக்கடன் மீதிகளிலிருந்து 6 மாதங்கள் முதல் 7 ஆண்டுகள் வரையான காலப்பகுதி கடந்திருந்த போதிலும் அந் நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதற்கு மாவட்ட செயலகத்தினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.6.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் இப்பலோகம மற்றும் கலந்பிந்துனுவெவ பிரதேச செயலங்களினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

அநுராதபுர மாவட்டத்தில் செயற்படுத்தப்படுத்துவதற்காக பொருளாதார அமைச்சு, ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களனால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்துவதற்காக 2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் கொள்வனவு திட்டமொன்று பிரதேச செயலகங்களினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

பிரதேச செயலகங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மதவாச்சி பிரதேச செயலக பிரிவில் 6 நலனாளிகளுக்கு ஜீவனோபாய அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் உரிய நியதிகளுக்கு இணங்காத வகையில் ரூபா 487,900 தொகை செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த உபகரணங்கள் கணக்காய்வுத் திகதியான 2015 மே 21 ஆந் திகதி வரையிலும் ஜீவனோபாய அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்படாமல் விளைவற்று காணப்பட்டன.

(ii) திரப்பனை பிரதேச செயலக அதிகாரப் பிரிவில் வீட்டுக்கு வீடு கிராமத்திற்கு கிராமம் அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் நலனாளிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 758,052 பெறுமதியான 362 உபகரணத் தொகுதிகள் கணக்காய்வுத் திகதியான 2015 ஏப்ரல் 15 ஆந் திகதி வரையிலும் நலனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படாமல் உரிய களஞ்சியங்களில் காணப்பட்டன.

(iii) முன்னைய ஆண்டுகளின் போது பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மற்றும் ஏனைய செலவினத் தலைப்புக்களிலிருந்து கிடைத்த அரச நிதி ரூபா 10,700,300 தொகை திரப்பனை பிரதேச செயலகத்தினால் 07 செயற்திட்டங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தன. அச்செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன், மீளாய்வாண்டிலும் அச்செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்குத் தேவையான நிதிஏற்பாடு மேற்கொள்ளப்படாமையால் 07 செயற்திட்டங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்த அரச நிதி மேலும் பயனற்ற செலவினமொன்றாக இருந்தது.

**3.8 இணங்காமைகள்**

-----------------------------

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

-----------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
| --- | --- | --- |
| ------------------------------------------------ | ------------- | ------------------------- |
| | ரூபா | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்<br>-------------------------------------------- | | |
| நிதிப்பிரமாணம் 237(2) | | பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வீட்டுக்கு வீடு கிராமத்திற்கு கிராமம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மாவட்டத்தினுள் ஜீவனோபாய செயற் திட்டத்திற்காக பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 333,974,496 பெறுமதியான காசோலைகள் நலனாளிகளின் பெயரில் எழுதி அதில் ரூபா 204,069,522 ஆன காசேலைகள் நலனாளிகளுக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன், ரூபா 129,904,974 பெறுமதியான காசோலைகள் பிரதேச செயலகங்களினுள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. |
| (ஆ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் கோவை<br>------------------------------------ | | |
| 3.2 வழிகாட்டல் | | (i) ரூபா 2 மில்லியனுக்கு மேற்பட்ட கொள்வனவுகள் தேசிய போட்டி கேள்வி கோரி ஒப்பந்தக்காரர்கள் தெரிவுசெய்வதற்குப் பதிலாக கெகிராவ பிரதேச செயலகப் பிரிவில் செயற்படுத் தப்பட்டிருந்த ரூபா 10,315,083 மதிப்பீட்டுப் பெறுமதியான 3 நீர் செயற்திட்டங்கள் மற்றும் நீர்ப்பாசன செயற்திட்டமொன்று ரூபா 2 |

மில்லியனுக்கு குறைவாக வரும் வகையில் 06 செயற்திட்டங்களுக்கு பகுதிகளாக்கப்பட்டு மதிப்பிடப்பட்ட பெறுமதியில் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தன.

(ii) ரூபா 6,875,889 மதிப்பீட்டுப் பெறுமதியான ரிட்டிகல தொல்பொருள் நிலையத்தின் நுழைவு வீதி நிர்மாண செயற்திட்டம் தேசிய போட்டி விலை கோருவதற்குப் பதிலாக மதிப்பீடு 3 பகுதிகளாக பிரிக்கப்பட்டு ரூபா 2 மில்லியனை விஞ்சாத வகையில் அங்கீகரிக்கப்பட்ட 3 சங்கங்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தன.

(இ) 2014 செப்தம்பர் 30 ஆந் திகதிய 2014/15(1) ஆம் இலக்க வாழ்வின் எழுச்சி பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கை

கெக்கிராவ பிரதேச செயலகப் பிரிவில் கால்நடைக் கட்டுப்பாடு வாழ்வாதார முறைமையை செயற்படுத்துவதற்காக இரண்டு நானாளிகளுக்கு ரூபா 50,000 வீதம் ரூபா 100,000 பெறுமதியான கால்நடைகள் வழங்கப்பட்டிருந்தது. அக்கால்நடைகள் கொள்வனவு செய்யப்பட்டதை உறுதிப் படுத்துவதற்கான பற்றுச்சீட்டுக்கள், கால்நடை மருத்துவர் அறிக்கை மற்றும் அடையாளத்தை இனங்காணும் இலக்கத்துடன் டோக்கன் என்பவற்றை சமர்ப்பிப்பதற்கு தவறியமையால் அச்செயற்திட்டத்தின் திருப்திகரமான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

## 3.9 செயற்திட்டத்தை அமுலாக்கல்

------------------------------------------------------------

செயற்திட்டத்தை ஆரம்பிக்காது கைவிட்டமை, செயற்திட்டத்தை பூர்த்திசெய்யாது கைவிட்டமை மற்றும் செயற்திட்ட தாமதம் தொடர்பாக கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) செயற்திட்டத்தை ஆரம்பிக்காது கைவிட்டமை**

--------------------------------------------------------------------------------------

ரூபா 21,517,053 மதிப்பீட்டுக் கிரயமான 10 பிரதேச செயலகங்களுக்குரிய 45 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்படாது கைவிடப்பட்டிருந்தன.

**(ஆ) செயற்திட்டத்தினை பூர்த்தி செய்யாது கைவிட்டமை**

-----------------------------------------------------------------------------------------------

03 பிரதேச செயலகங்களுக்குரிய ரூபா 30,307,198 மதிப்பீட்டுக் கிரயமான 15 செயற்திட்டங்களுக்காக ரூபா 2,249,033 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் அச் செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்பட்டிருந்தன.

**(இ) நிதிஏற்பாடு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் செயன்முன்னேற்றமொன்று பெற்றிராத செயற்திட்டங்கள்**

--------------------------------------------------------------------------------------------------------------------------------------

2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அநுராதபுரம் மாவட்டத்தின் 15 பிரதேச செயலகங்களில் ஜீவனோபாய அபிவிருத்தி செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்காக 8807 நலனாளிகளுக்கு நலனாளிகளின் பெயரில் எழுதி உரிய செலவின விடயங்களுக்கு வரவு வைக்கப்பட்டிருந்த ரூபா 162,886,978 பெறுமதியான காசோலைகள், நலனாளிகளுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. முறைப்படி நலனாளிகளை இனங்காணாமை, எதிர்பார்க்கப்பட்ட பொருட்கள் கிடைக்கப் பெறாமை, நலனாளிகளின் பங்களிப்பு வழங்கப்படாமை போன்ற காரணங்களினால் கணக்காய்வு திகதியான 2015 மே 21 ஆந் திகதி வரையிலும் அச்செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படாது குறித்த காசோலைகள் குறித்த பிரதேச செயலாளர்களின் பொறுப்பில் காணப்பட்டன.

**(ஈ) செயற்திட்டங்களை செயற்படுத்துவதிலுள்ள நலிவுகள்**

-----------------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மதவாச்சி பிரதேச செயலக பிரிவில் மதவாச்சி நகரின் வாரச் சந்தைக்காக ரூபா 8,648,070 தொகை செலவில் சந்தைக் கட்டிடமொன்றும் பாதுகாப்பு வேலியொன்றும் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், அதற்குத் தேவையான சுகாதார வசதிகள் மேம்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) மதவாச்சி நகரில் சுடலைக்கூட நிர்மாணத்திற்காக ஆரம்ப சாத்திய வள ஆய்வொன்று மேற்கொள்ளாமல் நகரின் மத்தியில் அமைந்துள்ள காணி யொன்றில் சுடலைக்கூடத்தை நிர்மாணப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததன் காரணமாக பொதுமக்கள் எதிர்ப்பின் பேரில் நிறுத்துவதற்கு நேர்ந்தமையால் பிரதேச மக்களுக்கு ரூபா 10,552,972 ஆன மேற்குறித்த செயற்திட்டம் இழக்கப்பட்டிருந்தது.

**(உ) பொருள் மற்றும் சேவைகள் வழங்கப்படாமல் பணம் விடுவிக்கப்பட்டிருந்தமை**

-----------------------------------------------------------------------------------------------------------------------------

கெக்கிராவ பிரதேச செயலகப் பிரிவில் 2014 இன் பிரதேச அபிவிருத்தி பன்முகப்படுத்தப்பட்ட விசேட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்வதற்காக வழங்குனர் நிறுவனத்திற்கு 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. கணக்காய்வு பரிசோதனை திகதியான 2015 ஏப்ரல் 22 ஆந் திகதி வரையிலும் உரிய நலனாளிகளுக்கோ அல்லது பிரதேச செயலகத்தின் களஞ்சியத்திற்கோ வேறு பொறுப்பு வாய்ந்த நிலையமொன்றுக்கோ கிடைக்காதிருந்த பொருட்களின் பெறுமதி ரூபா 2,644,070 ஆக இருந்தது.

**3.10 செயலாற்றல்**

----------------------

2014 ஆம் ஆண்டின் பாதிடப்பட்ட மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) 100,000 தென்னங் கன்றுகள் பகிர்ந்தளிக்கும் செயற்திட்டத்தின் VI ஆம் கட்டம்**

---

2014 ஆம் ஆண்டின் போது அநுராதபுரம் மாவட்டத்தில் 100,000 தென்னங் கன்றுகளை நடும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக பொருளதார அபிவிருத்தி அமைச்சினால் ரூபா 10 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. மாவட்டத்தினுள் 40,000 தென்னங் கன்றுகள் அளவில் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன், அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் திரப்பனை பிரதேச செயலகப் பிரிவில் இலக்கிடப்பட்ட 5900 தென்னங்கன்றுகளில் 1905 மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன. அதில் 60 கன்றுகள் பிரதேசத்தில் நடுவதற்கு முன்னர் சேதமடைந்திருந்தது. திரப்பனை பிரதேச செயலகப் பிரிவில் இலக்கிடப்பட்ட அளவில் 31 சதவீதம் செயன்முன்னேற்றமாக இருந்ததுடன் மாவட்டத்தில் அது 40 சதவீதமாக இருந்தது.

**(ஆ) தானிய சுழற்சி நிதியம்**

---

2014 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின் மூலம் அநுராதபுரம் மாவட்டத்திற்காக தானிய சுழற்சி நிதியமொன்றை தாபிப்பதற்காக ரூபா 300 மில்லியன் நிதி ஏற்பாடு மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அம் மொத்த நிதிஏற்பாட்டையும் மீளாய்வாண்டின் செலவினமொன்றாக செலவின விடயத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்த போதிலும், அத்தொகையிலிருந்து ரூபா 61,976,460 தொகை அதாவது 21 சதவீதம் சோளம் கொள்வனவு செய்யப்பட்டு ஒயாமடுவ களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. எஞ்சிய தொகையில் ரூபா 11,813,305 தொகை அல்லது 5 சதவீதம் தேசத்திற்கு மகுடத்திற்கு நிர்மணிக்கப்பட்ட 3 நெல் களஞ்சியங்களின் நிலுவை பட்டியலைத் தீர்ப்பதற்கு செலவிடப்பட்டிருந்தது. இத்தொகையில் எஞ்சிய 74 சதவீதம் விளைவற்று பொது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

**(இ) விவசாயிகள் மற்றும் மொத்த சேகரிப்பாளர்களிடமிருந்து சோள அறுவடையை கொள்வனவு செய்தல்**

---

2014 ஒக்தோபர் 10 ஆந் திகதிய DRD/Agri/Poultry/Maize ஆம் இலக்க அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் மூலம் ரூபா 42 மில்லியனான உத்தரவாத விலைக்கு சோளத்தைக் கொள்வனவு செய்வதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. விவசாயிகளின்

விளைச்சலுக்காக நியாயமான உத்தரவாத விலையொன்றை வழங்கும் நோக்கில் விவசாயிகள் மற்றும் மொத்த சேகரிப்பாளர்களிடமிருந்த இருப்பை கொள்வனவு செய்தல் இந்த உத்தரவாத விலையை நிர்ணயிக்க காரணமாக இருந்தது. அதன் பிரகாரம் மொத்த சேகரிப்பாளர்களிடமிருந்தும் விவசாயிகளிடமிருந்தும் நியாயமான விலைக்கு அந்த சோளம் கொள்வனவு செய்யப்பட்டதை உறுதிப்படுத்த வேண்டியிருந்தது. அவ்வாறு செய்யாமல் 7 மொத்த வியாபாரிகளிடமிருந்து மாத்திரம் மேற்குறித்த இருப்புக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அக்காலப்பகுதியில் விவசாயிகள் ஒரு கிலோ சோளத்தை ரூபா 26-35 இற்கு இடைப்பட்ட விலையில் விற்பனை செய்திருந்தமை விவசாய அலுவல்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவகத்தின் தகவல் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது, அதன் பிரகாரம் சோளத்திற்காக உத்தரவாத விலை நிர்ணயித்ததன் மூலம் எதிரபார்த்த நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) வாராந்த சந்தை அபிவிருத்தி செயற்திட்டம்**

---------------------------------------------------------------------------

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வீட்டுக்கு வீடு கிராமத்திற்கு கிராமம் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2014 இன் கீழ் 14 வாராந்த சந்தைகளை நிர்மாணிப்பதற்காக அநுராதபுரம் மாவட்டத்தின் 12 பிரதேச செயலகப் பிரிவுகளுக்காக ரூபா 122,850,000 ஆன நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. 2015 யூலை 22 ஆந் திகதி வரையில் ரூபா 26,001,761 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்தின் செயன்முன்னேற்றம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2014 ஆம் ஆண்டில் இந்த 14 வாராந்த சந்தைகளில் பதவிய மற்றும் கலென்பிந்துனுவெவ ஆகிய இரண்டு வாராந்த சந்தைகளில் மாத்திரம் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், ரூபா 118,000,000 மதிப்பீட்டுப் பெறுமதியான எஞ்சிய 12 வாராந்த சந்தைகளின் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) வேலை பூர்த்தி செய்யப்படாதிருந்த 12 செயற்திட்டங்களுக்காக ரூபா 21,292,981 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், செலவிடப்பட்ட செலவினத்தில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணம் பூர்த்தி செய்யப்படாத நிலையில் இருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்படும் வரை அதன் நலன்கள் மக்களுக்கு கிடைக்காமல்

இருந்ததுடன் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்காக 2015 யூலை 22 ஆந் திகதி வரையிலும் எந்தவொரு திட்டமும் காணப்படவில்லை.

**(உ) நலனாளிகளுக்கு வழங்கப்படாத காணி அனுமதிப்பத்திரங்கள்**

---

தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம், சனாதிபதியால் கையொப்பமிடப்பட்டு 04 பிரதேச செயலகங்களுக்கு கிடைக்கப் பெற்றிருந்த பதிவு செய்யப்பட்ட 579 உறுதிப் பத்திரங்கள் மற்றும் பதிவு செய்யப்படாத 386 உறுதிப் பத்திரங்கள் என்பன 01 ஆண்டு முதல் 20 ஆண்டுகள் வரையான காலப்பகுதி கடந்திருந்த போதிலும், நலனாளிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) கடன் அறவிடுவதிலுள்ள பலவீனங்கள்**

---

ஜீவனோபாய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2007 ஆம் அண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு வரை நலனாளிகளிடமிருந்து 50 சதவீத கடனை அறவிடல் என்ற அடிப்படையில் 21,303 செயற்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 130,536,181 தொகையில் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 22,132,755 தொகை மேலும் அறவிடப்பட வேண்டியுள்ளது.

**3.11 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

---

மாவட்டச் செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரிய தன்மையிலானதாகக் காணப்பட்டன. தெரிவுப் பரிசோதனைகளின் போது திரப்பனை பிரதேச செயலாளர் பிரிவில் விவசாய உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக 600 நலனாளிகளுக்கு ரூபா 5,000 வீதம் காசோலை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன், அவர்கள் பிரிவுகளில் விவசாயக் கைத்தொழில்களில் ஈடுபடுவதை இனங்காணாமல் காசோலை எழுதப்பட்டிருந்ததுடன், தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் 04 கிராம சேவையாளர் பிரிவுகளிலுள்ள சகல குடும்ப அலகுகளுக்காக ரூபா 5,000 வீதம் காசோலை எழுதப்பட்டிருந்தன.

**3.12 செயற்பாட்டு செயற்திறனின்மை**

---

மீளாய்வாண்டின் போது ரூபா 8,390,803 தொகை செலவு செய்து மரபுரீதியான நெல் கொள்வனவு செயற்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டிருந்தது. அச்செயற்பாட்டிற்கான

நிர்வாகச் செலவினமாக ரூபா 3,235,684 தொகை அதாவது நெல் கொள்வனவிற்காக செலவிடப்பட்டிருந்த செலவினத்தில் அது 38.5 சதவீதமான கூடிய பெறுமதியை எடுத்திருந்தது. அது முகாமைத்துவ செயற்திறனின்மையாக அவதானிக்கப்பட்டது.

**3.13 முகாமைத்துவ நலிவுகள்**

-----------------------------------------

**துப்பாக்கி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதைத் தவிர்த்தல்**

----------------------------------------------------------------------------------------------------------------

அனுராதபுரம் மாவட்ட செயலகத்தினால் அனுராதபுரம் மாவட்டத்தில் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் விநியோகிக்கப்பட்ட மொத்த துப்பாக்கி அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை 1920 ஆக இருந்தது. அத்திகதி வரை அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளாமல் தவிர்க்கப்பட்டவற்றின் எண்ணிக்கை 181 ஆக இருந்ததுடன், அத்துப்பாக்கிகளின் அனுமதிப்பத்திரங்கள் நீண்ட காலமாக புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மாவட்ட செயலகத்தினால் இவ்வாறு நீண்டகாலமாக அனுமதிப்பத்தரங்கள் புதுப்பிப்பதை தவிர்க்கும் அனுமதிப்பத்திரதாரிகள் தொடர்பாக முறைப்படி ஆராய்ந்து அனுமதிப்பத்திரதாரிகளை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.14 நிதி மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

-----------------------------------------------------------------------------------------------

கெக்கிராவ பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தினுள் மரண உதவி சங்க மண்டமொன்றை நிர்மாணிப்பதற்காக தேவையான கூரைதத் தகடுகள் அளவினை விஞ்சி 69 கூரைத் தகடுகளுக்காக ரூபா 156,975 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

**3.15 மனிதவள முகாமைத்துவம்**

------------------------------------------------

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்**

------------------------------------------------------------------------------------------------------------------------

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| ஊழியர் வகை | | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 73 | 61 | 12 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 45 | 20 | 25 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 1,331 | 1,071 | 260 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 1,682 | 1,361 | 329 | 8 |
| | மொத்தம் | 3,131 | 2,513 | 626 | 8 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பதவியணியினர் பயன்பாடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது 12 சிரேஷ்ட நிலை உத்தியோகத்தர்களுக்கும், 25 மூன்றாம் நிலை உத்தியோகத்தர்களுக்கும், 346 இரண்டாம் நிலை உத்தியோகத்தர்களுக்கும், 407 ஆரம்ப நிலை உத்தியோகத்தர்களுக்கும் வெற்றிடங்கள் காணப்பட்டன.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் மேற்குறித்த 790 வெற்றிடங்களை நிரப்புவதற்கு மாவட்ட செயலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.